# சென்னையில் அரசு பஸ் பலகை உடைந்து ஓட்டை வழியே கீழே விழுந்த பெண் படுகாயம்

# பஸ்களை முழுமையாக பரிசோதித்து இயக்க வேண்டும்: அமைச்சர் சிவசங்கரன் உத்தரவு

சென்னை, பிப்.7–

ஓடும் பஸ்சின் இருக்கை அடியில் பலகை உடைந்து ஓட்டை வழியே கீழே விழுந்த பெண் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

சென்னை வள்ளலார் நகரில் இருந்து திருவேற்காடு வரை செல்லும் அரசு பஸ் (தடம் எண்:59) நேற்று மதியம் பயணிகளை ஏற்றி கொண்டு சென்றது. பஸ்சில் பயணிகள் அதிக அளவில் இருந்தனர். இந்நிலையில் அமைந்தகரை, என்.எஸ்.கே.நகர் அருகே பஸ் சென்று கொண்டிருந்தது. பஸ்சின் கடைசி இருக்கையில் அமர்ந்திருந்த சென்னை மின்ட் பகுதியைச் சேர்ந்த ஷானாஸ் (வயது 30) என்ற பெண் பஸ் நிறுத்தத்தில் இறங்குவதற்காக எழுந்து நின்றார்.

அப்போது திடீரென இறுக்கையின் அடியில் இருந்த பலகை உடைந்து விழுந்தது. அந்த ஓட்டை வழியாக அவர் அப்படியே காலை மடித்த நிலையில் கீழே விழுந்தார். இருப்பினும் அந்த பெண் சாதுரியமாக பஸ்சில் இருந்த கம்பியை உறுதியாக பிடித்துகொண்டார். அவரது கால் மட்டும் தரையில் உரசியபடி சிறிது தூரம் இழுத்து செல்லப்பட்ட நிலையில் அபய குரல் எழுப்பினார்.

இதை கண்டதும் அருகில் இருந்த சக பயணிகள் சத்தம் போட்டனர். உடனே டிரைவர் அவசரமாக பஸ்சை நிறுத்தினார். சிறிது தூரம் சாலையில் காலை தேய்த்தபடி தர, தரவென இழுத்து செல்லப்பட்ட அவரை சக பயணிகள் பத்திரமாக மீட்டனர். இதனால் அதிர்ஷ்டவசமாக அந்த பெண் உயிர் தப்பினார். சாலையில் அவரது கால் தேய்த்ததால் சிராய்ப்பு ஏற்பட்டது. பின்னர் அருகில் இருந்த அரசு ஆஸ்பத்திரிக்கு அவரை சிகிச்சைக்காக பொதுமக்கள் அழைத்து சென்றனர். அங்கு சிகிச்சை பெற்று அந்த பெண் வீடு திரும்பினார்.

இந்த சம்பவத்தை கண்ட பயணிகள் பஸ் டிரைவர், கண்டக்டரிடம் வாக்குவாதம் செய்தனர். அப்போது 'பணிமனையில் இருந்து பஸ்சை எடுக்கும் போது முறையாக கவனித்து எடுக்க மாட்டீர்களா? என சரமாரியாக கேள்வி எழுப்பினர். இதையடுத்து டிரைவர் மற்றும் கண்டக்டர் பஸ் பழுதாகி விட்டதாக கூறி அந்த பஸ்சில் பயணம் செய்த பயணிகளை மாற்று பஸ்சில் ஏற்றி அனுப்பி வைத்துவிட்டு போலீசுக்கு தகவல் ஏதும் தெரிவிக்காமல் அங்கிருந்து பஸ்சை லாவகமாக எடுத்துச்சென்றனர்.

இந்த சம்பவம் குறித்து அமைந்தகரை போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் சென்னை மாநகர பேருந்தில் திடீரென ஏற்பட்ட ஓட்டையில் பெண் தவறி விழுந்த சம்பவம் தொடர்பாக செய்திதாள்களில் வெளியான செய்தியை சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி அமர்வில் காண்பித்து வழக்கறிஞர் ஜார்ஜ் வில்லியம்ஸ் என்பவர் அவசர முறையீடு செய்தார். போக்குவரத்து துறையின் அலட்சியத்தின் காரணமாகவே இந்த விபத்து நடந்துள்ளதாக கூறினார். பின்னர் நீதிபதிகள், இதுகுறித்து பார்ப்பதாக தெரிவித்தனர்.

**அமைச்சர் சிவசங்கரன் உத்தரவு**

இந்நிலையில் பஸ்களை முழுமையாக பரிசோத்து இயக்க வேண்டும் என்று அமைச்சர் சிவசங்கரன் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் சிவசங்கரன் வெளியிட்டுள்ள அறிக்கையில், அனைத்து மாநகர பேருந்துகளையும் முழுமையாக பரிசோதித்த பின் இயக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தி உள்ளார்.

## சென்னையில் போதைப் பொருள் விற்பனை: 9 நாட்களில் 32 பேர் கைது

சென்னை, பிப். 7–

சென்னையில் போதைப் பொருள் விற்பனை செய்ததாக கடந்த 9 நாட்களில் 32 பேர் கைது செய்யப்பட்டனர்.

சென்னை பெருநகரில் கஞ்சா மற்றும் போதை பொருட்கள் கடத்தி வருபவர்களையும், விற்பனை செய்பவர்களையும் கண்டறிந்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் துறை கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர், "போதை தடுப்புக்கான நடவடிக்கை" மூலம் சிறப்பு சோதனைகள் மேற்கொள்ள உத்தரவிட்டதன்பேரில், நடப்பாண்டில் இதுவரை, கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளில் 18 குற்றவாளிகள் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

# ஸ்பெயின் பயணத்தில் ரூ.3,440 கோடி தொழில் முதலீடு ஒப்பந்தங்கள்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தனிப்பாதை ஒன்றை வகுத்துச் செயல்பட்டு வருவதாகவும், முதல் பக்கத்தில் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறது, அதை பாராட்டியும் இருக்கிறது. இதுபோன்ற பாராட்டுகள்தான் எங்களை மேலும் உற்சாகப்படுத்தி செயல்பட வைக்கிறது.

தமிழ்நாட்டை தொழில்துறையில் தலைசிறந்த மாநிலமாக உயர்த்தும் எங்கள் பயணத்துக்கு ஸ்பெயின் பயணம் மிகமிக பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இது போன்ற அடுத்தடுத்த பயணங்கள் திட்டமிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மீண்டும் வெளிநாடுஎப்போது?**

கேள்வி : தற்போது நீங்கள் வெளிநாடுகளில் பயணம் மேற்கொண்டு வரும்போது முதலீடுகள் அதிகளவு ஈர்க்கப்படுகிறது. இதற்கு அடுத்த கட்டமாக முதலீடுகளை ஈர்ப்பதற்காக, வேறு நாடுகளுக்குச் செல்ல வாய்ப்பிருக்கிறதா?

முதலமைச்சர் பதில்: திட்டமிடும்போது உங்களிடம் சொல்லிவிட்டு செய்கிறேன். நாடாளுமன்றத் தேர்தல் இப்போது நெருங்கி வருவதால், அதற்குப் பிறகுதான் என்னுடைய பயணங்கள் இருக்கும்.

கேள்வி : நாடாளுமன்றத்தில் பிரதமர் உரை நிகழ்த்தியிருக்கிறார். பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். அது தொடர்பாக, அந்த நிகழ்வுகளை எல்லாம் நீங்கள் பார்த்தீர்களா?

பதில்: பார்த்தேன், படித்தேன், ரசித்தேன், சிரித்தேன். ஏனென்றால், பிஜேபி தான் எதிர்க்கட்சி போலவும், காங்கிரஸ் ஆளுங்கட்சி போலவும், அவர் தொடர்ந்து ஆட்சிக்கு வந்ததிலிருந்து, எதிர்க்கட்சியாக அவர் செயல்பட்டுக் கொண்டு, ஆளுங்கட்சியாக காங்கிரஸ் இருப்பது போல அட்டாக் செய்வது போலவும் பேசிக் கொண்டிருக்கிறார். இதுதான் புரியாத புதிராக இருக்கிறது.

கேள்வி : பிரதம மந்திரி பேசும்போது 400 இடங்களை நாடாளுமன்ற தேர்தலில் கைப்பற்றுவோம் என்று சொல்லி இருக்கிறார்? அதுபற்றிய தங்களது கருத்து.

**விஜய் கட்சி பற்றி....**

பதில்: மொத்தம் 400 தானா? 543 இடங்கள் இருக்கிறது. அதையும் கைப்பற்றுவேன் என்று சொன்னாலும் ஆச்சரியம் இல்லை.

கேள்வி : நடிகர் விஜய் அரசியல் கட்சித் தொடங்கி இருக்கிறார்? எப்படி பார்க்கிறீர்கள்.

பதில் : மக்களுக்குத் தொண்டாற்ற யார் வந்தாலும் நான் மகிழ்ச்சி அடைவேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறினார்.

**ஸ்டாலின் நன்றி**

ஸ்பெய்னில் இருந்து திரும்பும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில் கூறியிருப்பதாவது:–

ஸ்பெய்னில் இருந்து தாய்த்தமிழ்நாட்டுக்குத் திரும்புகிறேன். சிறந்த ஒருங்கிணைப்புக்காக ஸ்பெய்ன் நாட்டுக்கான இந்தியத் தூதரகத்துக்கு நன்றி. புதையலைப் போல அழகிய நினைவுகளுக்காக ஸ்பெய்ன், அந்நாட்டின் அருமையான மக்கள் மற்றும் அங்கு வாழும் தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

## கோ ஃபேஷன் (இந்தியா) லிமிடெட்

GO COLORS!

(முன்னர் கோ ஃபேஷன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
CIN: L17291TN2010PLC077303
பதிவு அலுவலகம்: சதக் சென்டர், 5வது தளம், புதிய எண். 4, பழைய எண். 144/2, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை, தமிழ்நாடு 600 034.

**31 டிசம்பர், 2023ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில், ஒரு பங்குக்கான வருமானம் தவிர, வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால்)

| வ. எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 31-12-2023 (தணிக்கை செய்யாதது) | முடிந்த ஒன்பது மாதங்கள் 31-12-2023 (தணிக்கை செய்யாதது) | முடிந்த காலாண்டு 31-12-2022 (தணிக்கை செய்யாதது) |
|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 20,213.11 | 58,108.49 | 17,552.05 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டங்களுக்கு முன்) | 3,229.49 | 9,287.80 | 3,271.58 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்) | 3,229.49 | 9,287.80 | 3,271.58 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்) | 2,340.34 | 6,972.46 | 2,431.38 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 2,317.31 | 6,903.39 | 2,435.78 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/–) | 5,400.90 | 5,400.90 | 5,400.90 |
| 7 | முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள மற்ற ஈக்விட்டி (மறுமதிப்பீட்டு கையிருப்பு தவிர) | - | - | - |
| 8 | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்டசெயல்பாடுகள்) | | | |
| | 1. அடிப்படை | 4.33 | 12.91 | 4.50 |
| | 2. டைலூட்டட் | 4.33 | 12.91 | 4.50 |

குறிப்பு:

செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ளகாலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்சேஞ்சஸ் (www.nseindia.com மற்றும் www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.gocolors.com)ல் உள்ளது. பிப்ரவரி 6, 2024 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் கூட்டத்தில் நிதி முடிவுகள் முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கோ ஃபேஷன் (இந்தியா) லிமிடெட்டிற்காக
(முன்னர் கோ ஃபேஷன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
பிரகாஷ் குமார் சரோகி
நிர்வாக இயக்குனர்
DIN No: 00496255

இடம்: சென்னை
தேதி: பிப்ரவரி 6, 2024

## பெயர் மாற்றம்

MALICK MOHIUDDEEN, தந்தை பெயர்: Abdul Malick, பிறந்த தேதி: 29.05.1969, நெ.17–18, ஷெரீப் நகர் 1வது தெரு, தர்னம்பேட்டை, குடியாத்தம், வேலூர் மாவட்டம் – 632602, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MALICK MUHIUDDEEN** என்று அழைக்கப்படுகிறேன்.

MALICK MOHIUDDEEN

## பெயர் மாற்றம்

**ஸ்டீபன் சாம்சன்.பா**
**(STEPHEN SAMSON.P)**
த/பெ. பாக்கியராஜ், பிறந்த தேதி: 05.08.1978, எண்.125, ஜோதிநகர், மெயின் தெரு, திருவொற்றியூர், சென்னை-600019 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனிமுதல் **ஸ்டீபன் சாம்சன் பாக்கியராஜ் (STEPHEN SAMSON PACKIARAJ)** என்று அழைக்கப்படுவேன்.

- ஸ்டீபன் சாம்சன்.பா

## பெயர் மாற்றம்

**GRACY VARUGHESE**, த/பெ.M.G.தாமஸ், (பிறந்த தேதி 12.01.1959), எண். 14, ஸ்ரீதேவி நகர், 8வது தெரு, ஆலப் பாக்கம், சென்னை - 600116 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனிமேல் **GRACY MARUTHIRAJ** என்று அழைக் கப்படுகிறேன்.

**Gracy Varughese**
(பழைய பெயர்)

## SHRIRAM FINANCE LIMITED

SALAVAKKAM BRANCH — VECHILE FOR SALE

| S.NO. | VEH.NO | MAKE | MODEL | YEAR OF MODEL |
|---|---|---|---|---|
| 1. | TN20AH-6424 | TATA | TATA SK 1613 FBT | 2008 |

CONTACT: 9585557193

## பொது அறிவிப்பு

சென்னை - 600023, அயனாவரம், ரங்கப்பா தெரு, பழைய கதவு எண். 14D, புதிய எண்.28 முகவரியில் வசிக்கும் B.D.கோதண்டபானி அவர்களின் மகன் சுமார் 64 வயதுள்ள B.K.ராமச்சந்திரன் மற்றும் B.K.ராமச்சந்திரன் அவர்களின் மனைவி சுமார் 60 வயதுள்ள R.லட்சுமிபிரபா ஆகிய எனது கட்சிக் காரர்கள் தெரிவிப்பது யாதெனில், எனது கட்சிக்காரர்களின் மகன் R.சரவணன் என்பவர் அவர்களை விட்டு கடந்த 6 மாதங்களுக்கு முன்பு பிரிந்து அவரது மனைவி மற்றும் குழந்தைகளுடன் எனது கட்சிக்காரர்கள் வாங்கி கொடுத்த சொத்தின் வாடகை வருமானத்தில் அவர் தனி குடித்தனம் செய்து வருகின்றனர், ஆகையால் என் கட்சிக்காரர்கள் சொத்தின் பேரில் எந்தவிதமான வில்லங்கங்களும் அறவே ஆட்படுத்த கூடாது, அப்படி ஏதேனும் வில்லங்கங்கள் அடமானம், முன்கிரையம், முன் அக்ரிமெண்ட், கொலாட்ரல் செக்யூரிட்டி, வாரிசு பின் தொடர்ச்சி பாத்திய கோரல்கள் என் கட்சிக்காரர்களின் மகன் R.சரவணன் ஏற்படுத்தினால் அவர்களை கட்டுபடுத்தாது, மேலும் மேற்படி ஏதாவது வில்லங்கங்கள் ஏற்படுத்தினால் அதனை கட்சிக் காரர்களின் மகனான R.சரவணன் தனது சொந்த பொறுப்பிலும், தனது செலவிலும் தீர்த்து கொள்ள வேண்டும்.

**D. சுப்ரமணியன் Advocate**
**Old no.2/1, New No.3, S.S Devar 5th Street, Ayanavaram, Chennai - 23. Ph: 98841 75933**

## வருவாய் கோட்டாட்சியர், உட்கோட்ட நடுவர், தாம்பரம், ந.க. எண் / 29 / 2024 / இ

**தனிஸ்லாஸ் ......மனுதாரர்**

தன் கபேரியல் சபையின் சகோ. அக்டோவியன் என்பவர் எண் . 16/ 19, G S T சாலை, பல்லாவரம், சென்னை 6 0 0 043, என்கிற விலாசத்தில் 20.06.2020 என்ற தேதியில் இறந்ததை எதிர் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய தவறியதால், தற்போது மேற்படி இறப்பினை பதிவு செய்து கொள்ளு மாறு எதிர் மனுதாரருக்கு உத்திர விடக்கோரி தாக்கல் செய்துள்ள மனு வின் பேரில் எவருக்கேனும் ஆட்சேப னை இருப்பின் தங்கள் ஆட்சேபணை யை வரும் 15 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத் தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் படுகிறது.

**தேதி : 06.02.2024 தனிஸ்லாஸ்**

## பொது அறிவிப்பு

திரு. ஆனந்த் கேசவன், த/பெ. திரு. ஏ. கேசவன், எண்.262, ஸ்ட்ராத்மூர் வே, ஓ'ஃபாலன், மிசோரி யு.எஸ்.ஏ. 63366 அவர்களிடம் இருந்து கீழேயுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை வாங்குவதற்கு எங்கள் கட்சிக்காரர் உத்தேசித்துள்ளார் என்பதை பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேற்கூறிய நபர், அவரால் விற்கப்படும் அட்டவணைச் சொத்தின் ஒரே மற்றும் முழு உரிமையாளராக இருப்பதாகவும், அதன் மீது அவருக்கு முழுமையான உரிமை இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள "அட்டவணைச் சொத்தில்" எந்தவொரு உரிமைகோரல், உரிமை, பாத்தியதை, ஆர்வம் அல்லது பிரச்சினை உள்ள எந்தவொரு நபரும் அல்லது மேற்கூறிய பரிவர்த்தனைக்கு எந்த விதத்திலும் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால், கீழே கையொப்பமிடப்பட்டவருக்கு எழுத்துப்பூர்வமாக, அவருடைய/அவர்களின் ஆட்சேபனைகள்/ உரிமைகோரல்கள்/பிரச்சினைகள்/விவரங்களை உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றுடன், இந்தப் விளம்பரம் வெளியான நாளிலிருந்து பதினைந்து (15) நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட காலத்திற்குள் அத்தகைய உரிமைகோரல் பெறப்படாவிட்டால், மேற்கூறிய உரிமையாளருக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள "அட்டவணைச் சொத்து"க்கான தெளிவான மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய பாத்தியதை இருப்பதாகக் கருதப்படும், அதன்படி, எங்கள் கட்சிக்காரர் அந்த சொத்தை வாங்கும் நடவடிக்கையை தொடர்வார். அதன்பின் மேற்கூறிய உரிமையாளர் மற்றும் எந்த உரிமைகோரல்கள்/ஆட்சேபனைகள்/பிரச்சினை களும் ஏற்றுக்கொள்ளப்படாது.

**அட்டவணை சொத்து**

**அயிட்டம் 1**

காலி நிலம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எண்.82, அயப்பாக்கம் கிராமம், திருக்கழுகுன்றம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம் (முன்பு காஞ்சிபுரம் மாவட்டம்), பழைய சர்வே எண். 75/1, பட்டா எண். 649இன் படி, புதிய உட்பிரிவு சர்வே எண்.75/1Aல் உள்ள ஹெக்டேர் 1.65.50 (அல்லது) ஏக்கர் 4.11 சென்ட் விஸ்தீரணம் கொண்ட நிலம், எல்லைகள் :
வடக்கு: கிராமணியார் நிலங்கள்
தெற்கு: பாலாறு
கிழக்கு : கிராமணியார் நிலங்கள்
மேற்கு : செங்கேணி நாயக்கர் நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்கள்
இந்த சொத்து செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருக்கழுக்குன்றம் சார் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது.

**அயிட்டம் 2**

காலி நிலம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எண்.82, அயப்பாக்கம் கிராமம், திருக்கழுகுன்றம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம் (முன்பு காஞ்சிபுரம் மாவட்டம்), பட்டா எண். 649இன் படி, பழைய சர்வே எண்.74/1 E2ல் உள்ள 8.50 ஏர்ஸ் (அல்லது) ஏக்கர் 0.21.5 சென்ட் விஸ்தீரணம் கொண்ட நிலம், எல்லைகள் :
வடக்கு: ச.எண். 74/1 E1
தெற்கு: ச.எண்.75/1A
கிழக்கு : ச.எண்.74/1F2
மேற்கு : ச.எண்.74/1D2
இந்த சொத்து செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருக்கழுக்குன்றம் சார் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது.

**அயிட்டம் 3**

காலி நிலம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எண்.82, அயப்பாக்கம் கிராமம், திருக்கழுகுன்றம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம் (முன்பு காஞ்சிபுரம் மாவட்டம்), பட்டா எண். 58இன் படி, சர்வே எண்.74/1 E1ல் உள்ள ஏக்கர் 0.16 சென்ட் (அல்லது) 6976 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம், எல்லைகள் :
வடக்கு: ச.எண். 73
தெற்கு: ச.எண்.74/1E2
கிழக்கு : ச.எண்.74/1F1
மேற்கு : ச.எண்.74/1D1
இந்த சொத்து செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருக்கழுக்குன்றம் சார் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது.

**எல்.தினகரன், வழக்கறிஞர்.**
**சுவாமி அசோசியேட்ஸ்**
**பிளாட் 3C, 3வது தளம், 174, ஆர்.ஏ. காம்ப்ளக்ஸ் பி விங், ஆற்காடு சாலை, பழனியப்பா நகர், வளசரவாக்கம், சென்னை 600087.**
**அலைபேசி: 99400 83013.**

## அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்

எண். 11, புதிய எண். 2, பார்த்தசாரதிபுரம், 2வது தெரு, தி.நகர், சென்னை600 017
Phone : 044-49530954 | E-mail : abi@afslindia.com | website : www.afslindia.in | CIN: L65993TN1993PLC024861 | GSTIN : 33AAACA3210D1ZP

**31 டிசம்பர் 2023ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

| விவரங்கள் | 31/12/2023 முடிந்த 3 மாதங்கள் (தணிக்கை செய்யாதது) | 30/09/2023 முடிந்த முந்தைய 3 மாதங்கள் (தணிக்கை செய்யாதது) | 31/12/2022 முடிந்த முந்தைய இதே 3 மாதங்கள் (தணிக்கை செய்யாதது) | 31/12/2023 முடிந்த 9 மாதங்கள் (தணிக்கை செய்யாதது) | 31/12/2022 முடிந்த முந்தைய இதே 9 மாதங்கள் (தணிக்கை செய்யாதது) | 31/03/2023 முடிந்த ஆண்டு (தணிக்கை செய்தது) |
|---|---|---|---|---|---|---|
| 1. (a) செயல்பாடுகள் மூலம் வருமானம் | - | - | - | - | | - |
| 2. (a) இதர வருமானம் | 48.39 | 44.52 | 42.59 | 125.12 | 1,953.14 | 1,984.23 |
| 3. மொத்த வருமானம் (1+2) | 48.39 | 44.52 | 42.59 | 125.12 | 1,953.14 | 1,984.23 |
| 4. செலவினம் | | | | | | |
| மூலதனப் பொருட்கள் உபயோக செலவு | - | - | - | - | - | - |
| வர்த்தகத்தில் பங்கு கொள்முதல் | - | - | - | - | - | - |
| மூலப்பொருளின் சரக்குகளில் மாற்றங்கள் | - | - | - | - | - | - |
| ஊழியர் செலவினம் | 8.12 | 5.62 | 5.01 | 18.06 | 28.83 | 39.47 |
| தேய்மானம் | 0.20 | 0.20 | 0.43 | 0.60 | 0.88 | 1.81 |
| இதர செலவினம் | 10.20 | 17.93 | 9.77 | 37.96 | 67.59 | 83.41 |
| மொத்த செலவுகள் | 18.52 | 23.75 | 15.21 | 56.62 | 97.30 | 124.70 |
| 4. வரி மற்றும் விதிவிலக்கான பொருட்களுக்கு முன் லாபம்/(நஷ்டம்) (3–4) | 29.87 | 20.77 | 27.38 | 68.50 | 1855.84 | 1859.53 |
| 5. விதிவிலக்கான பொருட்கள் | - | - | - | | | - |
| 6. வரிக்கு முன் லாபம்/(நஷ்டம் ( 4 - 5 ) | 29.87 | 20.77 | 27.38 | 68.50 | 1855.84 | 1859.53 |
| 7. வரி செலவுகள் | | | | | | |
| நடப்பு வரி | 4.20 | 9.00 | - | 14.20 | 400.00 | 400.00 |
| நடப்பு வரி சரி செய்யப்பட்டது - முந்தைய ஆண்டு | (65.67) | | | (65.67) | | |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | - | - | - | - | - | - |
| மொத்த வரி செலவுகள் | (61.47) | 9.00 | - | (51.47) | 400.00 | 400.00 |
| 8. காலத்திற்கான தொடரும் செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்) (6 - 7) | 91.34 | 11.77 | 27.38 | 119.97 | 1455.84 | 1459.53 |
| 9. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்) | - | - | - | - | - | - |
| 10. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான வரி செலவுகள் | - | - | - | - | - | - |
| 11. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)(வரிக்கு பின்) (10 - 11) | | - | - | - | - | - |
| 12. காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (9+12) | 91.34 | 11.77 | 27.38 | 119.97 | 1455.84 | 1459.53 |
| 13. இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி | - | - | - | - | - | - |
| a(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள் | - | - | - | - | - | - |
| (ii) பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது | - | - | - | - | - | - |
| b(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள் | - | - | - | - | - | - |
| (ii)பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது | - | - | - | - | - | - |
| மொத்த இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி | - | - | - | - | - | - |
| 14. மொத்த இதர விரிவான வருமானம்/(நஷ்டம்), நிகர வருமான வரி (13+14) | 91.34 | 11.77 | 27.38 | 119.97 | 1455.84 | 1459.53 |
| 15. செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு: ஒவ்வொன்றும் ரூ.10/-) | 540.00 | 540.00 | 600.00 | 540.00 | 600.00 | 600.00 |
| 16.ஒரு பங்கு சம்பாத்தியம் (ரூ.)(வருடாந்திரம் அல்ல) அடிப்படை பலமிழந்தது | | | | | | |

குறிப்பு:

1. 31 டிசம்பர் 2023ல் முடிந்த காலாண்டிற்கான மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 06 பிப்ரவரி, 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2. 31 டிசம்பர் 2023ல் முடிந்த காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பாக சட்ட தணிக்கையாளர்களால் வழங்கப்பட்ட குறுகிய மறுபரிசீலனை அறிக்கை 06 பிப்ரவரி, 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவு செய்யப்பட்டது.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கணக்குகள் நீக்ரூப் செய்யப்பட்டு மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
4. முதலீட்டாளர்கள் புகார் : காலாண்டு துவக்கத்தில் நிலுவை - இல்லை. காலாண்டில் பெறப்பட்ட மற்றும் நிவர்த்தி செய்யப்பட்ட புகார்கள் - இல்லை. காலாண்டு முடிவில் நிலுவையில் உள்ள புகார்கள் - இல்லை.
5. தனியான ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | 31 டிசம்பர், 2023 அன்று | 31 டிசம்பர், 2022 அன்று | 31 மார்ச், 2023 அன்று |
|---|---|---|---|
| **ஆஸ்திகள்** | | | |
| **நடப்பு அல்லாத ஆஸ்திகள்** | | | |
| சொத்து, ஆலை மற்றும் கருவிகள் | 0.93 | 2.37 | 1.53 |
| முதலீடுகள் | 74.24 | 77.62 | 64.97 |
| இதர நடப்பு அல்லாத ஆஸ்திகள் | 11.96 | 11.68 | 11.10 |
| | 87.13 | 91.66 | 77.59 |
| **நடப்பு ஆஸ்திகள்** | | | |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு இணையானது | 1,912.29 | 2,080.21 | 2,096.15 |
| இதர நடப்பு ஆஸ்திகள் | 64.81 | 463.42 | 466.19 |
| | 1,977.10 | 2,543.64 | 2,562.34 |
| **மொத்தம் - ஆஸ்திகள்** | **2,064.23** | **2,635.30** | **2,639.94** |
| **சம மற்றும் பொறுப்புகள்** | | | |
| சமம் | | | |
| பங்கு மூலதனம் | 540.00 | 600.00 | 600.00 |
| இதர சமம் | 1,495.94 | 1,630.11 | 1,633.80 |
| | 2,035.94 | 2,230.11 | 2,233.80 |
| **நடப்பு அல்லாத பொறுப்புகள்** | | | |
| கடன்கள் | - | - | - |
| **நடப்பு பொறுப்புகள்** | | | |
| இதர நடப்பு பொறுப்புகள் | 13.82 | 4.74 | 5.86 |
| ஒதுக்கீடுகள் | 14.48 | 400.46 | 400.28 |
| | 28.30 | 405.19 | 406.14 |
| **மொத்த சம மற்றும் பொறுப்புகள்** | **2,064.23** | **2,635.30** | **2,639.94** |

6. **நிகர லாப நல்லிணக்கம்**

முந்தைய இந்திய ஜிஏஏபிக்கு இணங்க மொத்த நிகர லாபத்தை சமரசம் செய்ததன் மூலம், செபிக்குத் தேவையான முந்தைய ஆண்டின் காலாண்டில் இந்த் ஏஎஸ்க்கு இணங்க மொத்த விரிவான வருமானம் வழங்கப்பட்டுள்ளது:

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | தனியானது: தணிக்கை செய்யாதது 31.12.2023 முடிந்த காலாண்டு | தனியானது: தணிக்கை செய்யாதது 31.12.2022 முடிந்த காலாண்டு | தனியானது: தணிக்கை செய்தது 31.03.2023 முடிந்த ஆண்டு |
|---|---|---|---|
| ஜிஏஏபி-ன் படி காலத்திற்கான நிகர லாபம் | 91.34 | 27.38 | 1,459.53 |
| கழிக்க : | | | |
| இதர விரிவான வருமானத்தில் உண்மையான லாபம்/ (நஷ்டம்). | - | - | - |
| **இந்த் ஏஎஸ்-ன் கீழ் நிகர லாபம் (A)** | **91.34** | **27.38** | **1,459.53** |
| இதர விரிவான வருமானம் | | | |
| வாங்குதல் தொடர்பான பரிவர்த்தனை செலவு ★ | - | - | - |
| **இதர விரிவான வருமானம் (B)** | - | - | - |
| **இந்த் ஏஎஸ்-ன் கீழ் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (A+B)** | **91.34** | **27.38** | **1,459.53** |

அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்
ஒப்பம்/-
சித்ரா சிவராமகிருஷ்ணன்
முழு நேர இயக்குனர்
DIN: 00292725

இடம் : சென்னை
தேதி : 06 பிப்ரவரி, 2024

## ரெடிங்டன் லிமிடெட் (முன்பு ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட் என அழைக்கப்பட்டது)

Redington
SEAMLESS PARTNERSHIPS

பதிவு அலுவலகம் : பிளாக் 3, பிளத்தின், ரெடிங்டன் டவர், உள்வட்ட சாலை, மேற்கு சரஸ்வதி நகர், 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை 600 091
வலைதளம்: www.redingtongroup.com | மின்-அஞ்சல்: investors@redingtongroup.com
CIN: L52599TN1961PLCO28758
போர்டு எண்: +91-44-42243363

**டிசம்பர் 31, 2023 - உடன் முடிந்த காலாண்டு / ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாதது ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை**

ரூ. கோடிகளில்

| வ. எண் | விவரங்கள் | ஒருங்கிணைந்தவை: முடிந்த காலாண்டு டிசம்பர் 31, 2023 தணிக்கை செய்யப்படாதது | முடிந்த காலாண்டு டிசம்பர் 31, 2022 தணிக்கை செய்யப்படாதது | முடிந்த ஒன்பது மாதங்கள் டிசம்பர் 31, 2023 தணிக்கை செய்யப்படாதது | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2023 தணிக்கை செய்யப்பட்டது |
|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் இருந்து மொத்த வருமானம் | 23,504.97 | 21,674.31 | 66,912.30 | 79,376.78 |
| 2. | வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு முன் லாபம் | 433.92 | 494.25 | 1,194.11 | 1,833.47 |
| 3. | வரிக்கு முன் லாபம் | 433.92 | 494.25 | 1,194.11 | 1,833.47 |
| 4. | வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு பின் லாபம் | 347.88 | 392.75 | 914.72 | 1,439.39 |
| 5. | விரிவான மொத்த வருவாய் | 329.48 | 435.24 | 828.51 | 1,683.58 |
| 6. | பங்கு மூலதன மதிப்பு | 156.34 | 156.31 | 156.34 | 156.31 |
| 7. | இருப்புகள் மற்றும் உபரி (கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு தவிர மற்ற பங்கு) | 6,901.10 | 6,307.39 | 6,901.10 | 6,596.25 |
| 8. | கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு | 175.76 | 174.67 | 175.76 | 174.79 |
| 9. | மொத்த நிதி சொத்துக்கள் | 7,233.20 | 6,638.37 | 7,233.20 | 6,927.35 |
| 10. | கட்டுப்படுத்தாத வட்டி | 323.52 | 351.65 | 323.52 | 365.82 |
| 11. | நிலுவையில் உள்ள கடன் | 3,637.68 | 3,074.88 | 3,637.68 | 3,127.37 |
| 12. | கடன்-பங்கு விகிதம் | 0.48 | 0.44 | 0.48 | 0.43 |
| 13. | ஒரு பங்கு வருமானம் (முக மதிப்பு தலா ரூ.2/-) (முடிந்த காலண்டுக்கான நிலையில் அல்லாத மதிப்பு) | | | | |
| | அ. அடிப்படை (ரூ.) | 4.36 | 4.86 | 11.42 | 17.82 |
| | ஆ. இளகியது (ரூ.) | 4.36 | 4.86 | 11.42 | 17.81 |
| 14. | கடன் சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை) | 7.67 | 4.75 | 5.45 | 6.46 |
| 15. | வட்டி சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை) | 6.13 | 6.59 | 5.28 | 7.74 |

**குறிப்புக்கள்**

1. நிறுவனத்தின் தனிநிலை நிதி முடிவுகளின் சாராம்சம்

ரூ. கோடிகளில்

| வ. எண் | விவரங்கள் | தனிநிலை: முடிந்த காலாண்டு டிசம்பர் 31, 2023 தணிக்கை செய்யப்படாதது | முடிந்த காலாண்டு டிசம்பர் 31, 2022 தணிக்கை செய்யப்படாதது | முடிந்த ஒன்பது மாதங்கள் டிசம்பர் 31, 2023 தணிக்கை செய்யப்படாதது | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2023 தணிக்கை செய்யப்பட்டது |
|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 11,104.02 | 9,438.22 | 30,737.36 | 35,341.44 |
| 2. | வரிக்கு முன் லாபம் | 209.37 | 190.12 | 1,086.58 | 1,276.20 |
| 3. | வரிக்கு பின் லாபம் | 153.58 | 141.38 | 920.67 | 1,071.88 |

2. மேற்கண்ட சுருக்க நிதிநிலை அறிக்கை, இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (பட்டியலிடுதலுக்கான கடமைகள் மற்றும் பிற வெளியீடுகளுக்கான தேவைகள்) நெறிமுறைகள் 2015, விதி எண் 33ன் படி, பங்குச் சந்தைகளில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான காலாண்டு / ஒன்பது மாதங்கள் / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கையின் சுருக்கமாகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பான முழு அறிக்கை, இந்திய தேசிய பங்கு சந்தை www.nseindia.com மற்றும் மும்பை பங்குசந்தை www.bseindia.com ஆகியவற்றின் இணைய தளங்களிலும், நிறுவனத்தின் www.redingtongroup.com என்ற இணைய தளத்திலும் உள்ளன.
3. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, நிறுவன இயக்குநர்கள் குழும கூட்டத்தில் பிப்ரவரி 6, 2024 ஒப்புதல் வழங்கப்பட்டது.
4. நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த மற்றும் தனிநிலை நிதி முடிவுகள் சட்டபூர்வ தணிக்கையாளர்களால் குறுகிய மறுஆய்வு செய்யப்பட்டுள்ளது. துணை மற்றும் இணை நிறுவனங்களின் நிதிநிலை முடிவுகள் அந்தந்த சட்டபூர்வ தணிக்கையாளர்களால் குறுகிய மறுஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ரெடிங்டன் லிமிடெட் சார்பில்
எஸ் வி கிருஷ்ணன்
நிதி இயக்குநர்

இடம் : சென்னை
தேதி : பிப்ரவரி 6, 2024